**07.08.2025** **அசல் வழக்கு எண்.11/2017** **Starting Time : 11.47 a.m.**

**வா.சா.1** **திரு.சுவாமிநாதன் த/பெ.சின்னசாமி.**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1,6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1**. எனது பாட்டனார் பெயர் முருவ கவுண்டர். அவருக்கு எனது தகப்பனார் சின்னசாமி மற்றும் தங்கவேல் கவுண்டர், பெரியசாமி கவுண்டர் ஆகியோர் பிள்ளைகள் ஆவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2,3 பிரதிவாதிகள் எனது சித்தப்பா பெரியசாமியின் மகன்கள் என்றால் சரிதான். முருவ கவுண்டருக்கு பாத்யப்பட்டிருந்த சொத்துக்களை அவரின் மூன்று மகன்களும் கூட்டாக அனுபவித்து அவர்களுக்குள் பாகம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் எனது பாட்டனாருக்கும் சொத்துக்கள் இருந்தது, அதனுடன் எனது தந்தை வாங்கிய சொத்துக்களும் சேர்த்து பாகம் செய்துக் கொண்டார்கள்.

**2**. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்துக்களா என்றால் எனது தகப்பனார் வாங்கிய சொத்துக்கள் ஆகும். இந்த வழக்கில் எனது பாட்டனாருக்கு சொத்துக்கள் பாத்யப்பட்டிருந்தது என்றும், எனது தகப்பனார் வாங்கிய சொத்துக்கள் என்றும், இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் அல்ல, எனது தகப்பனாரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று தாவாவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

**3**. எனது தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று ஆண் மக்கள். இரண்டு பெண் பிள்ளைகள். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்களை பொறுத்து ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. எனது தாயார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக எங்களது குடும்பத்தில் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக நானும் என்னுடன் பிறந்த இரண்டு சகோதரர்களும் வாய்மொழியாக சொத்துக்களை குறித்து பாகம் பிரித்துக் கொண்டோம்.

**4**. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எனது தகப்பனாரிடமிருந்து வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதில் எனக்கு வந்த சொத்துக்கள் என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1.42 ஏக்கர் ஆகும். மேற்படி நான் கூறியுள்ள சங்கதிகளை எனது வழக்கிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்தின் சர்வே எண்.16/3 என்று இருந்தது. உட்பிரிவு செய்யப்பட்டு 16/3ஏ, 16/3பி, 16/3சி, 16/3டி, 16/3இ என பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

**5**. தற்போது தாக்கல் செய்திருக்கும் வழக்கில் சர்வே எண்.16/3இ-ல் 43 சென்ட்டிற்கு வழக்கு உள்ளது என்றால் சரிதான். 1.42 ஏக்கரில் 16/3இ-ன் 43 சென்ட் தவிர மீதம் உள்ள அளவுகளில் 16/3ஏ, 16/3பி, 16/3சி, 16/3டி ஆகிய சர்வே எண்களுக்கு தனித்தனியே விஸ்தீரணம் கூறமுடியுமா என்றால் தனித்தனியே கூற முடியாது, ஆனால் சர்வே எண்கள்.16/3ஏ, 16/3பி, 16/3சி, 16/3டி மொத்தம் சேர்த்து 1 ஏக்கர் ஆகும்.

**6**. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் உரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். சர்வே எண்.16/3-ல் ஒரு கிணறு இருந்தது என்றால் சர்வே எண்.16/3பி-ல் கிணறு இருந்தது. சர்வே எண்.16/3பி-ன் விஸ்தீரணம் 3 சென்ட், அதில் தான் கிணறு உள்ளது என்றால் சரியல்ல. 9 சென்ட் அதன் விஸ்தீரணம் ஆகும். சர்வே எண்.16/3ஏ-ன் விஸ்தீரணம் 35 சென்ட்டும், சர்வே எண்.16/3பி-ல் 3 சென்ட்டும், சர்வே எண்.16/3சி-ல் 28 சென்ட்டும், சர்வே எண்.16/3டி-ல் 33 சென்ட்டும், சர்வே எண்.16/3இ-ல் 43 சென்ட்டும் மொத்தம் 1.42 ஏக்கர் என வருவாய் துறை ஆவணங்களில் உள்ளது என பிரதிவாதிகள் அவர்களது பதில் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.16/3பி-ல் கிணறு உள்ள சர்வே எண்ணில் 9 சென்ட் ஆகும். தனித்தனியே கூற முடியாது. ஆனால் சர்வே எண்.16/3ஏ-ல் இருந்து சர்வே எண்.16/3இ வரை உள்ள சர்வே எண்களின் மொத்த விஸ்தீரணம் 1.42 ஏக்கர் ஆகும்.

**7**. சர்வே எண்.16/3-ல் எனது தகப்பனாரும் அவருடன் பிறந்த சகோதரர்களும் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பே வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் எனது தகப்பனாருக்கு சர்வே எண். 16/3டி-ல் 33 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.16/3பி-ல் உள்ள கிணற்றில் எனது தகப்பனாருக்கும், அவருடைய இரண்டு சகோதரர்களுக்கும் சேர்த்து தலா 1/3 என ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது சிறிய தகப்பனார் பெரியசாமிக்கு சர்வே எண்.16/3எ-ல் 35 சென்ட்டும், சர்வே எண்.16/3இ-ல் 43 சென்ட்டும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**8**. எனது மற்றொரு சிறிய தகப்பனார் தங்கவேல் என்பவருக்கு சர்வே எண்.16/3சி-ல் 28 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண்.16/3டி-ல் 33 சென்ட் சொத்துக்களை எனக்கு கடந்த 4.5.1977-ஆம் ஆண்டு கிரயம் செய்துக் கொடுத்தார் என்றால் சரிதான். எனது சிறிய தகப்பனார் பெரியசாமிக்கு பாகமாக வந்த சர்வே எண்.16/3எ-ல் 35 சென்ட்டை 1993-ல் நான் கிரயம் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான்.

**9**. எனது மற்றொரு சிறிய தகப்பனார் தங்கவேலுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை சர்வே எண்.16/3சி - சொத்துக்களை அவர் யாருக்கும் எவ்வித பராதீனமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பாத்யப்பட்ட சொத்துக்களை எனது சிறிய தகப்பனார் ஆக்ரமிப்பு செய்தார் என்று நான் அவர் மீது வழக்கு தாக்கல் செய்ததில் வழக்கு எனக்கு சாதகமாகி தங்கவேலுக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் சர்வே எண்.16/3சி எனக்கு வந்து விட்டது. எனது தகப்பனாரிடமிருந்து எனக்கு கிரயம் பெற்ற வகையில் சர்வே எண்.16/3டி-ம், தங்கவேலுவிடமிருந்து வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பாகிய வகையில் சர்வே எண்.16/3சி-ம், எனது சிறிய தகப்பனார் பெரியசாமியிடமிருந்து கிரயம் பெற்ற வகையில் சர்வே எண்.16/3எ-ம், அவருக்கு பாத்யப்பட்ட கிணற்றில் 1/3 பங்கும் எனக்கு வந்துவிட்டது என்றால் சரிதான்.

**10**. பெரியசாமிக்கு பாத்யப்பட்ட சொத்துக்களில் சர்வே எண்.16/3எ-ஐ மட்டும் தான் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். சர்வே எண்.16/3இ-ஐ பொறுத்து நான் எதுவும் அவரிடமிருந்து கிரயமாகவோ, வேறு எந்த வகையிலோ பெறவில்லை என்றால் சரிதான். பெரியசாமிக்கு பாத்யப்பட்ட சாவே எண்.16/3இ சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி இராமமூர்த்திக்கு கிரயம் செய்துக் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். ஆனால், பெரியசாமியிடம் எனது தகப்பனார் உனக்கு கடன் அதிகமாகிவிட்டது என்றும், அதனால் எனது தகப்பனார் பெரியசாமி பெற்ற கடனை அடைத்துவிட்டார். ஆனால் மேற்படி சர்வே எண்.16/3இ சொத்துக்களை பெரியசாமி 1ஆம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துக் கொடுத்துவிட்டார்.

**11**. பெரியசாமியின் கடனை எனது தகப்பனார் தான் அடைத்தார் என்பதற்கு ஆவண சாட்சியமோ அல்லது வாய்மொழி சாட்சியமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை பொறுத்து சர்வே எண்.16/3இ பெரியசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்பது உண்மை என்றால் சரிதான். ஆனால் மேற்படி சங்கதிகள் யாவும் எனது தகப்பனார் பெரியசாமிக்கு கடனை அடைப்பதாக கூறியவை அனைத்தும் வாய்மொழியாக தான் என்றால் சரிதான். சர்வே எண்.16/3இ-ஐ பொறுத்து வாய்மொழி ஏற்பாடுகளை வைத்து தான் நான் சர்வே எண்.16/3இ-ல் உரிமை கொண்டாடி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், மேற்படி சர்வே எண்.16/3-சொத்துக்களை பொறுத்து ஏற்பட்ட அனைத்துமே வாய்மொழியாக ஏற்பட்டவை தான்.

**12**. சர்வே எண்.16/3இ-சொத்துக்கள் எந்த திசையில் உள்ளது என்றால் சர்வே எண்.16/3எ, 16/3பி, 16/3சி, 16/3டி நேராக உள்ளது அதில் சர்வே எண்.16/3டி-க்கு கிழக்கு பக்கம் சர்வே எண்.16/3இ சொத்து உள்ளது. எனக்கு பாத்யப்பட்ட சர்வே எண்.16/3எ, சர்வே எண்.16/3சி, சர்வே எண்.16/3டி-ல் என்ன சாகுபடி செய்கிறேன் என்றால் நெற்பயிர் சாகுபடி செய்கிறேன். சர்வே எண்.16/3இ-ல் 1ஆம் பிரதிவாதி என்ன சாகுபடி செய்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்று 30 ஆண்டுகளாக என்ன பயிர் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர்

மேற்படி நிலத்தை வேறு நபர்களுக்கு மாறி, மாறி குத்தகைக்கு விட்டு வருவதால் எனக்கு என்ன பயிர் செய்கிறார்கள் என்று தெரியாது.

**13**. 1ஆம் பிரதிவாதி 30 வருடங்களுக்கு முன்பு கிரயம் பெற்று அனுபவித்து வருவதால் சர்வே எண்.16/3இ-யை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்திருப்பது கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பணியில் இருந்ததால் 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியாததால் என்னால் உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியவில்லை. பின்னிட்டு தான் தெரிய வந்தது. 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் அவர் கிரயம் பெற்று 4,5 ஆண்டுகள் கழித்து தான் எனக்கு தெரிய வந்தது.

**14**. சர்வே எண்.16/3இ-ஐ தவிர்த்து மற்ற சர்வே எண்.16/3எ, 16/3டி-க்கு எனது பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான், ஆனால் சர்வே எண். 16/3இ-ல் என்னுடைய பெயரும் சேர்த்து கூட்டு பட்டாவாக உள்ளது. நான் எனது தகப்பனாரிடமிருந்து கிரயம் பெற்ற பின்னிட்டும் சர்வே எண்.16/3டி-க்கு என் பெயரும் சேர்த்து கூட்டு பட்டாவாக தான் இருந்தது என்றால் சரியல்ல. சர்வே எண்.16/3இ-ல் என் பெயரும் சேர்த்து கூட்டு பட்டாவாக வந்ததை பொறுத்து மட்டுமே நான் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற பின்னிட்டு சர்வே எண்.16/3இ-ஐ பொறுத்து அவருடைய பெயருக்கு பட்டா மாறுதல் விண்ணப்பித்து பட்டா மாற்றம் செய்துக் கொண்டார் என்றால் அது தவறுதலாக பெறப்பட்டதாகும்.

**15**. தாவா சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற பின்னிட்டு அவரது மகள் கவிதா என்பவருடன் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அவரையும் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். மேற்படி பாக ஆவணத்தில் 1ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவருடைய பேரனான 7ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரையும் நான் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். ஆனால் மேற்படி பாகப்பிரிவினை ஆவணம், செட்டில்மெண்ட் ஆவணமும்

தாவா தாக்கல் செய்த பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டதால் 6,7 பிரதிவாதிகளை வழக்கில் நான் சேர்த்துள்ளேன். அதனால் 1ஆம் பிரதிவாதிக்கு பாத்யப்பட்ட சர்வே எண்.16/3இ சொத்துக்களை அவர் 7ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டதால் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. சர்வே எண்.16/3இ சொத்துக்கள் பெரியசாமி என்பவருக்கு பாத்யப்பட்டது என்பதை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**Ending time : 12.56 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.